1991 ஜூலை 11] [டாக்டர் தே. குமாரதாஸ்]

மாவட்டத்தில் தொடர்ச்சியாகப் பெய்து வந்த மழையின் காரணமாக குறிப்பாக கடந்த 2, 3 தினங்களாகப் பெய்த பெருமழையின் காரணமாக மாவட்டத்தில் பல லட்சக் கணக்கான ரூபாய் மதிப்புள்ள வாழைகள் அழிந்தும், ரப்பர்கள் பாதிக்கப்பட்டும், சாலைகள் சீரழிந்தும் கடலில் மீன் பிடிக்கச் செல்கின்ற மீனவ நண்பர்கள் மீன் பிடிக்கச் செல்ல முடியாமல் அவர்களுடைய கட்டுமரங்கள், போட்டுகள் பாதிக்கப்பட்டு, இப்படி மாவட்டம் முழுவதும் பல கோடிக்கணக்கில் ரூபாய் நஷ்டம் ஏற்படக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.

9-55 மணி

மாண்புமிகு முதலமைச்சரவர்கள் கருணைகூர்ந்து, பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிடுவதற்கு ஒரு குழுவை நியமித்து, அந்த மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள பாதிப்புகளைக் களைய எல்லாத் துறைகளிலும் வேகமாகச் செயல்பட வேண்டுமென்று எண்ணிச் செயல்படும் அவர்கள், கன்னியாகுமரி மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள குறைகளைக் களையவும் முழு முயற்சிகளை மேற்கொள்ளுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் திரு. லாரன்ஸ் அவர்களும் இதே பிரச்சினை குறித்து என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். அவர்களும் இந்தப் பிரச்சினையை எழுப்பியதாகக் கருதிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் திரு. குமாரதாஸ் அவர்களும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், உறுப்பினர் திரு. லாரன்ஸ் அவர்களும் எழுப்பிய பிரச்சினையைக் கவனத்தில் கொண்டு உடனடியாக, பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட ஒரு குழுவை ஏற்படுத்தி அனுப்புவோம் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

4. சட்ட முன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்).

(அ) கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1991.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்தல். 1991-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்ட முன்

வடிவு. இதனைப் பேரவை முன் அறிமுகம் செய்ய மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் அனுமதி கோருவார்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1991-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்டமுன் வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்" எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)

மறுப்போர் "இல்லை" என்க (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : சட்டமுன் வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.